நாள்: 19.05.2014

**பெறுநர்**

**ஆசிரியர் அவர்கள்,**
மதுரை.

**அன்புடையீர்,**

கீழ்க்கண்ட செய்தியைப் பிரசித்தி பெற்ற தங்களது நாளிதழில் செய்தியாக வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நாடார் மஹாஜன சங்கம் ச.வெள்ளைச்சாமி நாடார் **கல்லூரிப் பேரவைக்கான தேர்தல் 18.05.2014ஆம் நாள் காலை 8.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை** கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. 2014-2017ஆம் ஆண்டிற்கான தேர்தலில் தலைவர் பதவிக்கு சிவகாசி காளீஸ்வரி தொழிற்குழுமத்தின் தலைவர் திரு. A.P. செல்வராஜன் போட்டியிட்டு 3816 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட திரு. N. சண்முகவேல் 938 வாக்குகள் பெற்றார். துணைத்தலைவர் பதவிக்கு பெரீஸ் பிஸ்கட்ஸ் சேர்மன் மற்றும் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி இயக்குநர் டாக்டர் பெரீஸ் P. மகேந்திரவேல் போட்டியிட்டு 4626 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். எதிர்த்துப் போட்டியிட்ட சம்பத் 216 வாக்குகளும், திரு. V. செல்வலிங்கம் 142 வாக்குகள் பெற்றனர். செயலாளர் பதவிக்கு அவ்வைக்கழகம், கவி பாரதி மேல்நிலைப்பள்ளி நிறுவனர் Er. A.T.B. போஸ் போட்டியிட்டு 4418 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். எதிர்த்துப் போட்டியிட்ட திரு. K. தாளமுத்துராஜா 539 வாக்குகள் பெற்றார். பொருளாளர் பதவிக்கு மடீட்சியாவின் செயலாளர் Er. K. சேர்மபாண்டியன் போட்டியிட்டு 3969 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். எதிர்த்துப் போட்டியிட்ட திரு. S. கந்தசாமி 796, திரு. M. அனந்தசேகர் 133 வாக்குகளும் பெற்றனர். அறுபது செயற்குழு உறுப்பினர் பதவிக்கு 77 பேர் போட்டியிட்டனர். மேற்படி குழுவைச் சேர்ந்த 60 செயற்குழு உறுப்பினர்கள் வெற்றி பெற்றனர்.

வெற்றி பெற்றவர்களுக்கு மதுரை உயர்நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட தேர்தல் மேற்பார்வையாளர் வழக்கறிஞர் திரு. P. திலக்குமார், மாவட்ட பதிவாளர் அலுவலகத்தின் பிரதிநிதியாக திருப்பரங்குன்றம் துணைப்பதிவாளர் திரு. V. சித்திரன் ஆகியோர் சான்றிதழ்களை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் தேர்தல் குழு வழக்கறிஞர்கள் திரு. S. ஆனந்தன், திரு. N. திலிப்குமார், திரு. N. அறிவுச்சந்திரன், திரு. R. ஆறுமுகம், திரு. S.J. சக்கரவர்த்தி மற்றும் நாடார் மஹாஜன சங்கம் பொதுச்செயலாளர் திரு. G. கரிக்கோல்ராஜ், திரு. D. நல்லதம்பி ஆகியோர் உடன் இருந்தனர். சமயநல்லூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு. T. சாந்தசொரூபன் அவர்களின் தலைமையில் பாதுகாப்பு பணி சிறப்பாக செய்யப்பட்டிருந்தது.

தேர்தல் குழு